# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 171/2025 | LW- 4 | PW- 5 |

| | |
|---|---|
| Name | : அருண்செல்வம் ( கண்ணுற்ற சாட்சி) |
| Father's Name | : சந்திரன் |
| Village | : லிங்கவாடி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 37/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of March 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து மைக்செட் வைத்துள்ளேன். அ.சா.1 என் அண்ணன் மனைவி ஆவார். அ.சா.2 எனது அண்ணன் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 18.04.2025ம் தேதி மாலை 6.00 மணியளவில் நான் எனது இருசக்கர வாகனத்தில் லிங்கவாடியில் இருந்து வத்திப்பட்டி செல்லும் சாலையில் சென்று கொண்டிருந்தபோது எனக்கு முன்னால் ஆட்டோவை ஓட்டி சென்ற நபர் வேகமாக இடிப்பது போல் சென்று கொண்டிருந்தார். அவர் அ.சா.1 சந்தியாவின் வீட்டின் அருகே வேகமாக சென்றபோது சந்தியாவின் மகன் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். அந்த சிறு பையனின் வலது பக்க நெஞ்சின் மீது ஆட்டோ ஏறி இறங்கிவிட்டது. சிறுவனை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நானும் உடன் சென்றேன். நத்தம் மருத்துவமனைக்கு சிறுவனை கொண்டு சென்றபோது அவர்

இறந்துவிட்டதாக சொன்னார்கள். ஆட்டோவின் பதிவு எண். TN 57 CW 1965 ஆகும். அந்த ஆட்டோவை ஆஜர் எதிரிதான் ஓட்டி வந்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

2) புகார்தாரர் சந்தியா மற்றும் அவரது கணவர் உதயகுமார் ஆகியோர் எனது அண்ணன் மனைவி மற்றும் அண்ணன் என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று நான் இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும், எனக்கு முன்பாக எதிரி ஆட்டோவை ஓட்டி சென்றார் என்ற விபரத்தையும் போலீசார் விசாரிக்கும்போது சொன்னேன். எனக்கு முன்பாக ஆட்டோ எவ்வளவு தூரத்தில் சென்று கொண்டிருந்தது என்றால் 30 அல்லது 40 அடி தூரம் இருக்கும். சம்பவ இடத்திற்கு சிறிது முன்பு மேற்கே ஒரு வேகத்தடையும், அதற்கு அடுத்து சிமிண்ட் பாலத்திற்கு பின்பு ஒரு வேகத்தடையும் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக இரு வேகத்தடைகள் இருப்பதால் மேற்கிலிருந்து வரும்போது வேகமாகவும், அதேபோல் கிழக்கிலிருந்து வரும்போது வேகமாகவும் வருவதற்கு வாய்ப்புகள் இல்லை என்றால் சரிதான்.

3) நான் விபத்தை ஆட்டோவிற்கு பின்னால் இருந்து வந்து பார்த்தேனா அல்லது நேரடியாக பார்த்தேனா என்றால் நேரடியாக பார்த்தேன். பையன் எந்த திசையில் இருந்து வந்தான் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தெற்கிலிருந்து வடக்காக சென்றார். எனக்கு சம்பவம் பற்றி தெரியாது என்றாலும், இறந்து போன சிறுவன் எனது அண்ணன் மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.03 15:09:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.171/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 171/2025 LW- 7 PW- 6

Name : ஜெயப்பிரகாஷ் ( பார்வை மகஜர் சாட்சி)

Father's Name : பெருமாள்

Village : லிங்கவாடி

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 29/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of March 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து மதுரை தனியார் நிறுவனத்தில் குழு தலைவராக பணியாற்றி வருகிறேன். அ.சா.1ஐ தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது. கடந்த 19.04.2025ம் தேதி காலை 6.00 மணியளவில் லிங்கவாடி வடக்கு தெருவில் எனது அண்ணன் மகன் மித்ரனுக்கு விபத்து நடந்த சம்பவ இடத்தில் வைத்து நத்தம் காவல் நிலைய ஆய்வாளர் அங்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்தார்கள். பின்னர் வீடு மற்றும் சாலை போன்ற பகுதிகளையும் எனது அண்ணன் மகன் வந்த திசை ஆகியவற்றையும் குறித்துக் கொண்டார்கள். பின்னர் சாட்சியாக கையொப்பம் கேட்டதன் பேரில் நானும், செல்லம் என்பவரும் கையொப்பம் செய்தோம். **(பார்வை மகஜரில் உள்ள சாட்சி**

**கையொப்பம் அ.த.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

2) சம்பவத்தில் இறந்தது எனது அண்ணன் மகன் என்றால் சரிதான். போலீசார் என்ன எழுதினார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். சம்பவ இடத்திற்கு மேற்கு பக்கம் ஒரு வேகத்தடையும், கிழக்கு பக்கம் ஒரு வேகத்தடையும் உள்ளது என்றால் சம்பவ இடத்திற்கு சுமார் அரை கிலோ மீட்டருக்கு முன்பாக லிங்கவாடி விநாயகர் கோவிலுக்கு அருகே வளைவில் ஒரு வேகத்தடை மட்டும் உள்ளது. அங்கிருந்து 100 மீட்டர் கழித்து ஒரு வேகத்தடை டிரான்ஸ்பார்மருக்கு அருகே உள்ளது. நான் சொல்வது போல் சம்பவ இடத்திலிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்தில் வேகத்தடை இல்லை என்றாலும், சம்பவ இடத்திற்கு அருகிலேயேதான் வேகத்தடை உள்ளது என்றாலும் சரியல்ல. இறந்து போனவர் எனது அண்ணன் மகன் என்பதால் அவர் சொல்லிக் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகே எனக்கு வீடு உள்ளதா என்றால் இல்லை.

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.03 15:09:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்